# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்)

**ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதியவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அவர்களால் 2013, மாச்சு மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, பெப்புருவரி மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***210 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007034 -1,000 (2013/03)

## ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதியவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும் ஆன ஒரு கழகம் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி ; அத்துடன் அதன் குறிக்கோள்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென வல்பொல கிராமத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதியவைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் இதனகத்துப்பின்னர் "சமிதிய" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதியவில் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும் ; (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர்கொண்டு, அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

2-PL 006935 - 50 (2013/01)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) வல்பொல கிராமத்தின் பொதுவான முன்னேற்றத்திற்காகவும், இளம் சமுதாயத்தினரின் நலன்களுக்காகவும் சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபடலும் இலங்கையில் புத்தசாசனத்தை நிலைநாட்டிய அரஹத் மகிந்த மகா தேரரை நினைவூட்டுமுகமாக ஆண்டுதோறும் "மகா மகிந்தோற்சவய"வில் பொசன் மகா பெரஹராவை நடாத்துதல் ;

(ஆ) வல்பொல கிராமத்தினுள்ளும் சமிதியவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இடப்பரப்புகளிலும் சமுதாய சேமநல, பண்பாட்டு சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேம்படுத்துதலும் அவற்றின் செயற்பாட்டில் ஈடுபடுதலும் ;

(இ) வீதி அபிவிருத்தி அத்துடன் வீடமைப்புத் திட்டங்கள் என்பனவற்றின் நிறைவேற்றுதலையும், வைத்திய சாலைகள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள், சமுதாய நிலையங்கள் என்பவற்றையும் பட்டினங்களினதும், கிராமங்களினதும், அபிவிருத்திக்கு உதவக்கூடிய அத்தகைய வேலைகளையும் செயற்பாடுகளையும் நிர்மாணித்தலையும் மேம்படுத்தலையும் பொறுப்பேற்றல் ;

(ஈ) ஓர் ஆரம்பப் பாடசாலை, ஒரு நூல்நிலையம் என்பவற்றைத் தாபித்தலும், சாதனமளித்தலும் அத்துடன் பேணுதலும் ;

(உ) சர்வதேசரீதியல் 'தம்ம'வைப் பரப்புவதில் ஈடுபடுதல் ;

(ஊ) பௌத்த தத்துவத்தையும் வாழ்க்கைமுறையையும் பேணிப் பாதுகாத்தலும் பிரசாரம் செய்தலும் ;

(எ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள ஏனைய பௌத்த அமைப்புகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல் ;

(ஏ) பிரிவேன பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் நிறுவி, கொண்டுநடாத்துவதன்மூலமும் புலமைப் பரிசில்களை வழங்குவதன்மூலமும் கல்வியை ஊக்குவித்தலும் அத்துடன் மேம்படச் செய்தலும் ;

(ஐ) வறியோர், அநாதைகள் அத்துடன் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு, உடை அத்துடன் உறைவிடங்களை வழங்குதல் ;

(ஒ) அநாதை இல்லங்களையும் வயோதிபர் இல்லங்களையும், கதியற்றோருக்காக நிறுவி கொண்டுநடாத்துதலும், சமூக நலன்புரி நிலையங்களை நிறுவுதலும் ;

(ஓ) குருடர், ஊமை, செவிடர் மற்றும் அங்கவீனர்களுக்கான நலன்புரி வசதிகளை ஏற்பாடுசெய்தலும், பராமரிப்பு இல்லங்களை அமைத்தலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ள தொண்டர் சேவையாட்களுக்கும், ஏனையோருக்கும் புலமைப்பரிசில்கள்மூலம் அல்லது காசாக அல்லது வேறுவகையாக உதவியளித்தல் ;

(க) நூலகங்களை நிறுவி கொண்டுநடாத்துதல், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள் மற்றும் வார வெளியீடுகள் முதலியவற்றுக்கு பங்களித்தல் அத்துடன் அவைகளை வெளியிடுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உகந்தனவாக கருதப்படக்கூடிய வேறு சேவைகளைச் செய்தல் ;

(ங) உடைகளை, அறிவுறுத்தலுக்கான கட்டணங்களை அல்லது வேறு வாழ் வசதிகளை அவர்களுக்கு ஏற்பாடு செய்துகொடுப்பதும் அத்தகைய வேறு வழிவகைகளின் மூலமும் வறுமையான நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு ஒரு தொழிலுக்காக, சுயதொழிலுக்காக அல்லது சேவைக்காக ஆயத்தம் செய்வதற்காக அதைத் தொடங்குவதற்கான அல்லது அதில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அளித்தலும் ;

(ச) கல்வியையும் அறிவையும் முன்னேற்றுவதற்காகவும் பரப்புவதற்காகவும், பரவச்செய்வதற்காகவும், உதவிப் பணங்கள், புலமைப்பரிசில்கள், பரிசுகள், நன்கொடை கள், நிதியுதவி அத்துடன் வேறுவகையிலான உதவி என்பவற்றை ஏற்பாடுசெய்தலும், பாடசாலைகள், நூலகங்கள், பண்பாட்டு நிலையங்கள் என்பவற்றைத் தாபித்தலும் ;

(ஞ) ஏதேனும் கைத்தொழிலில் அல்லது தொழிலில் அல்லது ஏதேனும் ஏற்றுமதி அல்லது இறக்குமதித் தொழிலில் ஈடுபடுதலும், கமத்தொழில், கைத்தொழில், வர்த்தக முயற்சிகளை அத்துடன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்தல் போன்ற கைத்தொழில் களைத் தொடங்குவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் ஆட்களுக்கு உதவுதலும் துணைபுரிதலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் விசாலிப்புச் சேவைகளையும் பொறுப்பேற்றலும், தொழினுட்பத்தைக் கைமாற்றுவது தொடர்பாகப் பிரசாரச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத் தலும் ;

(ட) கூட்டுத்தாபனத்தின் அதே குறிக்கோள்களையுடைய வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு எதனுடனும் ஒத்துழைத்தலும் அல்லது பங்குபற்றுதலும் ;

(ண) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேலெடுத்துச் செல்வதற்காக இலங்கையிலும் வேறெங்கேனும் மாநாடுகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள் தொகுதிக் கற்கைகள், அத்துடன் விரிவுரைகள் என்ப வற்றுக்கு ஆதரவளித்தலும் அவற்றை நடாத்துதலும் ;

(த) கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்கும் முன்னேற்றுவதற்கும் விரும்பத்தக்கவை யெனக் கருதக்கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள் அத்துடன் பருவவிதழ் கள் என்பவற்றை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ; அத்துடன்

(ந) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு அவசியமானவாறாக, இடைநேர்விளைவாக அல்லது உகந்தவாறாக இருக்கக்கூடிய அத்தகைய வேறு செயல்களை அத்துடன் காரியங்களைப் புரிதலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும், கட்டுப்பாடும் நிருவாகமும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளும் பேரவையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஆளுநர்களை இப்பேரவை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியில் பதவிவகிக்கின்ற, இதனோடுள்ள அட்டவணையில் எவ்வுறுப்பினரின் பெயர்கள் குறித்துரைக்கப்படுகின்றனவோ அவ்வுறுப்பினர்களைக் கொண்ட பேரவையானது கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையாதல் வேண்டும்.

*உறுப்பினர்களின் இடாப்பு.*

**5.** பேரவை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியில் சமிதியின் உறுப்பினரொருவராயிருக்கும் ஒவ்வோர் ஆளும் அத்துடன், கூட்டுத்தாபனத்தினது உறுப்பினரொருவராக அதன்பின்னர் உரியமுறையில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோர் ஆளும் அவருடைய பெயரைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

*ஆதனத்தைக் கொள்ளுதல் நிதிகளை முதலீடு செய்தல் கடன்களைத் திரட்டுதல் முதலியவற்றுக்கான கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**6.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கும் அமைய, கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றிற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தலும், கொள்ளுதலும், வாடகைக்கு எடுத்தலும், நிருமாணித்தலும் வேறுவகையில் பெறுதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(இ) நாணயமாற்றுண்டியல்களையும், காசோலைகளையும் வாக்குறுதிப்பத்திரங்களையும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்களையும் ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப் பிடுதலும், மாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் அத்துடன் வங்கிக்கணக்குகளைத் திறத் தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப் பேரவை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடுசெய்தல் ;

(உ) ஒப்பப்பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையினவுமான கொடைகள் என்ப வற்றைப் பரிந்துகேட்டலும் பெறுதலும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் ;

(எ) ஏதேனும் நிலஞ்சார் அல்லது ஆள்சார் ஆதனங்களு டன் சம்பந்தப்பட்ட எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்புகளையும், நிபந்தனைகளையும் அத்துடன் வேறு ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்புக் களையும் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளுதல், நிறை வேற்றுதல், புரிதல் அத்துடன் நிருவகித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களை சேவையாளர் களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது பதவி முடிவுறுத்தலும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக் கொடைகளையும், அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சி யளித்தல் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தவாறும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

7. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினரினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும் ;

(ஆ) பேரவையைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பேரவை உறுப்பினர்களின் தத்துவங்களும், கடமைகளும், நடத்தையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனமும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தையும் ;

(ஈ) பேரவையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களிற் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையிலான அத்துடன் கூட்டுத்தாபனத்திலான உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகுதியீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதவையாகவிராத அளவுக்கு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகள் கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேமுறையிலும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) பேரவையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றித் தகுந்த கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒருதடவையாவது பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*சமிதியவிடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சமிதியவுக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப் படுதலும் வேண்டும் என்பதுடன் அந்த நாளில் சமிதியவுக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** ஏதேனும் கொள்வனை, மானியக்கொடை, கொடை அல்லது குத்தகைச் சாசனத்தின்மீது அல்லது அதன் பயனைக் கொண்டு அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப் பின்மீது அல்லது அதன் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமையவும் அல்லது தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் நோக்கங்களுக்காகவும் அதிலுள்ள நம்பிக்கைப் பொறுப்புகளின்மீதும் அதில் அடங்கியுள்ள நிபந்தனைகளுக் கமையவும், (நம்பிக்கைப்பொறுப்புக்கள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தினதும் ஏற்பாடுகளுக்கு எப்போதும் அமைய, அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாப னத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப் படுதல் வேண்டும்.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பேரவையின் ஓர் உறுப்பினரினதும் செயலாளரினதும் அல்லது பேரவையினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தான சாசன மெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுக மளித்தமைக்கு அடையாளமாக சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்ப மிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின் றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக் கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் விஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும், மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தின் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

| **அட்டவணை** | *பிரிவு 4 (2)* |
|---|---|
| பிரதம போசகர் (மதகுரு) | வண. பண்டித களுகல ஸோரத தேரோ அமரபுற ஆரியவன்சவின் பிரதம மதகுரு சத்தம்ம யுக்திக மஹா நிகாய சிலாபம், புத்தளம் பிரிவுகள், அலுத்குரு கோரலே தெற்கு, வல்பொல ஸ்ரீ விமலரத்னராமயவில் பொறுப்புவகிப்பவர் |
| பிரதம போசகர் (சட்டம்) | திரு. ஜீ.டீ. குலதிலக்க, முன்னால் மாவட்ட நீதிபதி. |
| தலைவர் | திரு. பி.ஆர். காமினி சிறிசேன, (பீ.எஸ்.சீ.,) ஜே.பி. (அகில இலங்கை) |
| செயலாளர் | திரு. யூ.டீ. ஜயந்த ரணசிங்க |
| பொருளாளர் | திரு. ஆனந்த திஸ்ஸ சமரசிங்க |
| பிரதம அமைப்பாளர்கள் | 1. திரு. ஆர்.டீ.ஆர். விஜேசிங்க, ஜே.பி.<br>2. திரு. ஆர். பிரேமகுமார சிறிசேன |
| பிரதித் தலைவர்கள் | 1. திரு. நிமல் கருணாதிலக்க, ஜே.பி.<br>2. திரு. மஞ்சுல தயாரத்ன |
| பிரதிச் செயலாளர்கள் | திரு. பீ.சீ. தயாரத்ன<br>2. திரு. நீல் சமந்தா கருணாரத்ன |
| பிரதிப் பொருளாளர் | திரு. நலிந்த ருவன் இந்திக குணரத்ன |
| பிரதி அமைப்பாளர் | 1. திரு. எச்.டீ. சிறிவிமல் குணரத்ன<br>2. திரு. எம்.டீ.எம். ஜயதிஸ்ஸ<br>3. திரு. ஆர்.டீ. ரோஹித சுமனரத்ன |
| கணக்காளர் | திரு. ஏ.வீ. பியதாச |
| பிரசார அலுவலர் | திரு. பாலித சந்திரலால் ரணமுக, ஆயுர்வேத வைத்தியர் |
| பிரசார அலுவலர் (ஊடகம்) | 1. திரு. அநுர குலசூரிய<br>2. திரு. வசந்த ரணவீர<br>3. திரு. சுரன் சதுரங்க<br>4. திரு. சுசந்த நிஹால் |
| மேற்பார்வையாளர் | திரு. ஆர்.டீ.கே. விமலசிறி |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்